2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

**நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.** யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

ஏப்ரல் மாத இதழ்



நான் உங்களைக்

# கீர்த்தியும் புகழ்ச்சியுமாக

வைப்பேன்.

செப்பனியா 3:20

I WILL GIVE YOU

# HONOR AND PRAISE

ZEPHANIAH 3:20


Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | APL |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

# இந்த மாத வாக்குத்தத்தம்

## 'நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்'. செப்பனியா 3:20

ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டும் இந்த செய்தி மலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்கிறேன்.

இந்த மாதம் தேவன் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பார். கடந்த காலங்களில் பல நிந்தை, அவமானம், கண்ணீர் வழியாக நீங்கள் கடந்து வந்திருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்கள் 430 வருடம் எகிப்தில் அடிமைகளாய் பல நிந்தைகள் அநுபவித்து வந்தனர். ஆனால் தேவன் ஒரே நாள் இரவில் அவர்களை விடுதலையாக்கினார். அன்னாள் பெனின்னாவால் மிகவும் நெருக்கப்பட்டு வேதனையை அநுபவித்து வந்தாள். தேவன் அவள் நிந்தையை மாற்றி கீர்த்தியும் புகழ்ச்சியுமாய் மாற்றினார்.

அன்புக்குறியவர்களே, தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. உங்கள் வாழ்வில் அற்புதங்கள் செய்வார். தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். எந்த சூழ்நிலையிலும் விசுவாசத்தை விட்டு விடாதிருங்கள். 25 நாட்கள் சபையில் உபவாச ஜெபம் நடைபெற இருக்கிறது. இணைந்து ஜெபியுங்கள்.



**கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசிர்வதிப்பார்.**

**Rev. Dr. J. Samuel Jebaraj**



ஆண்கள் பகுதி

# கடனிலிருந்து மீளுவது எப்படி?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் கடனில் பலர் சிக்கிக்கொள்வதற்கான காரணங்களை பற்றி பார்த்தோம். இந்த மாதம் கடனிலிருந்து மீள நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து காண்போம்.

கடனில் சிக்கிகொண்ட அநேகர் நம்பிக்கை இழந்து ஊரைவிட்டு ஓடிவிடுகிறதையும், சில நேரங்களில் வாழ்க்கையை மாய்த்துக்கொள்கிறதையும் நாம் காண்கிறோம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அறியாமல் கடனில் சிக்கிகொள்ளும்போது, நம்பிக்கையை இழந்துவிடாமல் முதலாவது தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும். கடன் வாங்கி கடனை அடைக்க நினைக்காமல், செலவை குறைக்க திட்டமிடுங்கள். வருமானத்தை அதிகரிக்க வழி என்ன என்று யோசியுங்கள். ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்தின் ஆறு நாட்களும் கடுமையாக உழையுங்கள். கௌரவம் பார்க்காமல் கிடைக்கிற வேலையை செய்யுங்கள். கூடுதலாக பகுதிநேர வேலைகளைச் செய்யுங்கள்.

கடனை திரும்பச் செலுத்த திட்டமிடுவது அவசியம். உங்கள் அனைத்துக் கடன்களையும் பட்டியலிடுங்கள். உங்கள் வருமானத்தையும் சொத்துமதிப்பையும் கணக்கிடுங்கள். எதையாவது விற்றால்தான் கடனை அடைக்க முடியும் என்ற நிலை இருந்தால் அப்படிசெய்தாவது கடனிலிருந்து வெளியே வரத் தயங்காதீர்கள். அதிக வட்டியுள்ள கடன்களை முதலில் அடைத்தால் வட்டிப்பணம் மிச்சமாகும். அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்த கடன்களை அடைக்கலாம். நிச்சயம் குறிப்பிட்ட காலவரைக்குள் நீங்கள் கடனிலிருந்து வெளிவர கர்த்தர் கிருபை செய்வார். கடனிலிருந்து மீண்டுவர கர்த்தர் உதவி செய்தபின் மீண்டும் கடனிலே போய் சிக்கிக் கொள்ளாதபடி மிகுந்த கவனத்தோடு இருங்கள்.

**"நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை" (உபா 15:6) என்ற வசனத்தின்படி கடன் வாங்குகிற நிலையிலிருந்து கடன்கொடுக்கும் நிலைக்கு கர்த்தர் உங்களை உயர்த்துவாராக!**

## புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்..

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெயராஜ்

# மிகுந்த கனி

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! எப்பொழுதுமே பெண்களாகிய நமக்குள், மற்றவர்கள் தன்னை நல்லவள் என்று சொல்ல வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் அது மட்டும் நடக்கவே நடக்காது. ஏன்? எப்போதும் குற்றப்படுத்துகிறவர்களும், குறை கண்டுபிடிப்பவர்களும் நம்மை சுற்றி இருந்து கொண்டே இருப்பர். என்ன செய்தாலும் திருப்திப்படாத குடும்பமும், என்னத்தைச் செய்தாய் என குறைப்பட்டுக்கொள்பவர்களும் இருக்கும் வரை நற்பெயர் என்பது கேள்விக்குறியே. ஆனாலும் யோவான் 15 ஆம் அதி. மிகுந்த கனிகளைக் கொடுக்க, நாம் நல்ல குணமுடையவர்களாய் மாற இயேசு நம்மில் என்ன செய்கிறார் எனப் பார்ப்போம்.

**1) சுத்தம் பண்ணுகிறார்:**

நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க விருப்பமுடையவர்களாய் இருப்போமானால், அதிக கனிகளைக் கொடுக்கும்படி நம்மை சுத்தம் பண்ணுகிறார். எப்படி அவருடைய உபதேசத்தினாலே. அநேக நேரங்களில் நான் பேசுவது சரி, செய்வது சரி என்ற நிலையில் தான் இருப்போம். ஆனால் சத்தியத்தை அறிய அறிய தான் நான் தவறு செய்திருக்கிறேன் என்ற உணர்வே வரும். சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். இயேசு நமக்கு போதித்த போதனைகளை வாசிப்பது, கேட்பது மாத்திரமல்ல, அதன்படி செய்யும் போது, நாம் சுத்திகரிக்கப்படுவோம். சுத்தமாவோம்.

**2)நிலைத்திருப்பேன்: யோவான் 15:4,5**

என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன். இயேசுவில் நிலைத்திருந்தால், மிகுந்த கனிகளைக் கொடுக்கலாம். இயேசுவோடு இசைந்து வாழ வாழ அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் மாறுவோம். இயேசுவின் சாயல் நம்மில் வெளிப்படும். மறுரூபத்தின் மேல் மறுரூபம் அடைவோம். நம் மூலம் இயேசு வெளிப்படுவார். அவரில் நிலைத்திராமல் இயேசுவை வெளிப்படுத்த முடியாது. என்ன வந்தாலும் முன் வைத்த காலை பின் வைக்காமல் இயேசுவில் நிலைத்திருக்கும் போது அவரும் நம்மில் நிலைத்திருப்பார். நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

**3)வார்த்தைகள்:**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள் என்கிறார். நம் வாழ்வில் என்ன வந்தாலும் இயேசுவை விட்டு பின்வாங்காமல், நமது மனசு மாமிசம் விரும்புகிறபடி முடிவெடுக்காமல், இயேசுவின் வார்த்தையைப் பிடித்துக் கொள்வோமானால், அதன்படி செய்வோமானால், தோற்றுப்போவதில்லை. கர்த்தர் நம்மை ஜெயிக்கப் பண்ணுவார். நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ, அது உங்களுக்கு செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாய் இருப்பீர்கள். உங்கள் மூலம் பிதா மகிமைப்படுவார். அவருடைய சீஷராயிருப்பீர்கள்.



பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING

# ஆத்துமாவில் ஒழுக்கம்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்

இயேசுவின் நாமத்தில் சபையின் வாலிபர்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.கடந்த மாதம் பார்த்தபடி தேவனுடைய ஆலயமாகிய உங்கள் சரீரத்தை நன்றாக கவனித்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இந்த கடைசி கால போராட்டம் என்பது வெகுவாக நம் மனதில், எண்ணத்தில் எழும் போராட்டங்களே. பிசாசுக்கு தெரியும் ஒருவன் எண்ணத்தில் அவனை முடக்கிவிட்டால் அவன் ஆயுசுக்கும் ஒரு கோழையாக தோல்வியாளனாகவே வாழ்ந்து விடுவான் என்று.

வாலிப நாட்களில் ஒவ்வொருவரும் ஒரு விஷயத்தை தங்கள் பெலனாக எண்ணிக்கொள்வார்கள். வெளிப்புறத்தோற்றம், நிறம், படிப்பு, குடும்ப பின்னணிக்குரிய பெருமை, ஊர், வட்டாரம் என்றெல்லாம் வீணான, மாயையான காரியங்களை தங்கள் பெலனாக எண்ணும் வயது இது. ஆனால், வேதம் என்ன சொல்கிறது தெரியுமா? மாற்கு 8:36 "உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால், லாபம் என்ன?"

*ஆத்துமாவில் மனது, உணர்ச்சிகள், சித்தம்* (Mind, Emotions, Will) *என்று மூன்று உள்ளது. ஒரு வாகனத்திற்கு இஞ்ஜின் போன்று, நம் உயிருக்கு ஆத்துமா. ஒரு சிறு கோளாறு ஏற்பட்டாலும் வாழ்க்கை என்கிற வண்டி சரிவர ஓடாது. இந்த ஆத்துமாவை எப்போதும்* sharp *ஆக* full emotions *இல்* discipline *ஆக வைத்திருக்க உதவும் ஒரு ஆயுதம் தான் – கர்த்தருடைய வார்த்தை (சங்கீதம் 19:7 )*

*நம் ஆத்துமாவை அனுதினமும் புதுப்பித்து நம்மை ஒரு புத்திமானாக ஆக்குவதும் தேவ வார்த்தை தான். தேவனை அறியாததினால், சுயநலமாக மற்றவரின் அன்பு, நன்மை செய்யும் குணத்தை பயன்படுத்திக் கொள்ளும் மனிதர்கள் நிறைந்த இன்றைய உலகத்தில், துல்லியமான அறிவோடு (நீதிமொழிகள் 2:10) வாலிப வயதில் நீங்கள் இருக்க வேண்டியது மிக அவசியம். காதல் என்ற வலை, தவறான பழக்கங்கள், நண்பர்கள் மூலம் உங்களை வீழ்த்த பிசாசு 24 மணிநேரம் உழைப்பான். 1 சாமுவேல் 18:1 ல் சொன்னது போல உங்கள் ஆத்துமா இன்னொரு மனிதரோடு சீக்கிரம் உணர்வில் கலந்திடும். அதனால் யாருக்கு உங்கள் நேரத்தைக் கொடுக்க வேண்டும், யாரிடம் பழக வேண்டும் என்பதை நீங்கள் தான் யோசித்து* (mind), *உணர்ந்து* (emotions), *முடிவு* (will) *செய்ய வேண்டும். பல கோடி மனிதர்களின் மத்தியில் தேவன் உங்களை அவருக்கு என்று தெரிந்துகொண்டுள்ளார். நீங்கள் எந்த பாதையை தெரிந்தெடுக்க போகிறீர்கள்?*

## GOD BLESS YOU...

ZOOM YOUTH FELLOWSHIP
FORWARDING ARMY
MEETING ID: 337 022 2215
PASSCODE: 1234
EVERY WEDNESDAY @ 9.00 PM
SCAN & JOIN

# எலியாவின் தேவன்



பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

## சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.



நீண்டதூரப் பயணத்திற்காகப் புறப்பட்ட ஒரு கப்பல், சில நாட்களுக்குள்ளாகவே பயங்கரமான புயல் காற்றில் சிக்கிக் கொண்டது. கப்பல் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு போய்ச் சேர முடியாமல் தடுமாறியதோடு கப்பலில் இருந்த உணவுப் பொருட்களும் குறைந்து விட்டது. இருந்த கொஞ்ச உணவுப் பொருட்களை ஜாக்கிரதையாக உபயோகித்தனர். இறுதியில் அவர்களிடம் ஒரே ஒரு நாளுக்கான ஆகாரம் மட்டுமே இருந்தது. அவர்களிடம் போய்ச் சேர வேண்டிய தூரமோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தது.



கப்பலின் கேப்டன் தேவபயம் நிறைந்தவர். ஜெபத்தில் அதிக நம்பிக்கை உள்ளவர். அவர் பணியாளர் ஒருவரை அழைத்து கப்பலில் மீதமுள்ள உணவுப் பொருட்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து ஒரு தார்ப்பாய் மேல் வைக்கச்சொன்னார். கப்பலில் இருந்த அனைவரையும் அழைத்து வட்டமாக அதைச் சுற்றி முழங்கால்படியிடச் சொன்னார். அவரும் அங்கே முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தார். இந்த ஆகாரப் பொருட்களைப் பெருகப்பண்ணும். இதைகுறைந்து போக விடாதிரும். நீர் இதைச் செய்வீர் என்று நாங்கள் நம்பி உம்மைத் துதிக்கிறோம் என்று கண்ணீரோடு கருத்தாய் ஜெபித்தார்.அனைவரும் ஊக்கமாக ஜெபித்தபின் மேல் தளத்திற்குச் சென்ற அவர், தூரத்தில் ஒரு சிறிய கப்பல் வருவதைக் கண்டார். ஒரு மணி நேரத்திற்குப்பின் அச்சிறிய கப்பல் அவர்களை நெருங்கியது. அக்கப்பலின் தலைவன் படகில் வந்து புயலினால் தாங்கள் வழி தவறிவிட்டதாகவும், அதனால் தங்கள் விற்பனைக்கு கொண்டு செல்லும் உணவுப்பொருட்கள் வீணாகிவிடும் என்பதால் அவர்களுக்குத் தேவையானால் இலவசமாக அந்த உணவுப்பொருட்களை தருவதாக கூறினான். உடனே கேப்டன் மகிழ்ச்சியுடன் பெற்றுகொண்டார். அவர்கள் கரைக்குப் போய் சேரும் வரைக்கும் தேவையான ரொட்டி இறைச்சி போன்ற எல்லா உணவுப்பொருட்களும் அதில் இருந்தன. அனைவரும் நன்றியுடன் தேவனைத் துதித்தனர்.

அன்பான சிறுபிள்ளைகளே நம் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. இச்சிறுவயதிலேயே உங்கள் தேவைகளையெல்லாம் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர் உங்கள் தேவைகளைச் சத்திப்பார்.ஆமேன்...

**மனப்பாட வசனம்:**

**சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. சங்கீதம் 34:10**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN'S TIME**
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

**நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.**

**மாதம் தேவை: ரூ.1,94,100**

**பொறுப்பு: Bro. அர்னால்டு**


**Pr. Daniel Babu** *Gujarath*


**Pr. Stephen Rathod** *Rajasthan*


**Pr. Mandeep kidhay** *Moga*


**Pr. Chaman Masih** *Ablowal*


**Pr. Binu Vijayan** *Tripuri*


**Pr. SawarGill** *Gurdaspur*


**Pr. Peter Masig** *Taran Taram*


**Pr. Sandeep Singh** *Chunnai Kalan*


**Pr. Inderjit Singh** *Mohali*


**Pr. Prasenjit Basumatary** *Assam*


**Pr. Karthick** *Chandigarh*


**Pr. Gurdial Singh** *Dehriwal Droga*


**Pr. Rajkumar** *Kurali*


**Pr. Rajesh** *Mahatpur*


**Pr. Simson** *Karnataka*


**Pr. Happy Masih** *Sarspur*


**Pr. Jirma Lal** *Bazara*


**Pr. Caleb** *Delhi*


**Pr. Heral Kaddara** *Rajasthan*


**Pr. Arionp Kumar** *Ajimar*


**Bro.Sam Guna Seelan** *Shalom Charity Mission*


**Pr. Kamal Deep** *Punjab*


**Pr. Godson Joy** *Punjab*


**Pr. Harjeet Kaur** *Nawashar*


**Pr. Jaswinder Kumar** *Delhi*


**Pr. Pritam Singh** *Rajasthan*


**Pr. Sonu** *Makhu*


**Pr. Patras Masih** *Feruyzepur*


**Pr.Dhananjay Nokman** *Assam*


**Pr. Jinod Rabha** *Assam*


**Bro. Prakash** *Shalom Charity Trust*


**Sis. Sugantha** *Shalom Charity Trust*


**Bro. Joshua Bhuriya** *Shalom Charity Trust*


**Sis. Karuna K. Damor** *Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Church, Pudukottai.
**Bank** : TMB
**A/c No.** : 035100050313093
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள *QR Code* ஐ *Scan* செய்யவும்.**

# சாட்சிகள்

● கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நான் ஆராதனைக்கு வரும்போது தலைவலி மற்றும் வயிறு வலி அதிகமாய் இருந்தது. ஆராதனை முடிந்தவுடன் போதகரிடம் ஜெபித்து விட்டு சென்றேன். தேவன் பரிபூரண சுகத்தை கொடுத்தார். ஜெபித்த போதகர் அவர்களுக்கு நன்றி, சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்..

–Sis. ஜெய சந்திரன், புதுக்கோட்டை

---

● கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. எனது மூத்த மகன் வாங்கிருந்த வீடு விற்க முடியாமல் இருந்தது. ஜெபக்குறிப்பு பெட்டியில் எழுதி போட்டிருந்தேன். எழுதிப்போட்ட ஒரு மாதத்திற்குள் வீடு விற்கப்பட்டது. தேவன் ஜெபத்தை கேட்டு பதில் தந்தார்.கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்...

– Sis. செல்வராணி

---

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். கடந்த மாதம் வீட்டு லோன் கட்டி முடித்து விட்டேன். ஆனாலும் வங்கியில் வீட்டு பத்திரத்தை தர மறுத்து மூன்று மாதமாக அலைய வைத்துக் கொண்டே இருந்தார்கள். இந்நிலையில் குடும்பத்தில் உள்ள அனைவரும் பொருத்தனையோடு ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வீட்டு பத்திரத்தை கையில் கிடைக்க கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

– Sis. பாப்பா, புதுக்கோட்டை

---

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபையின்



REV. DR. J. SAMUEL JEBARAJ

## 25 நாட்கள் உபவாச ஜெபம்

24 மார்ச் திங்கள் முதல் ஏப்ரல் 17 வியாழன் வரை

தினமும் இரவு

07.00PM -08.15PM

LIVE STREAMING HD

சபையில் ஜெபம் நடைபெறும்.

YouTube holymountainagchurch

---

## A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349

விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.

---

## அமாவாசை ஜெபம்

28 ஏப்ரல் திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்:

கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்:

இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலியர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

**ஏப்ரல்-2025**
**(செப்பனியா- மல்கியா) அதிகாரம் வரை**
**வசன இருப்பிடம் எழுதவும்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | | 2 |
| | | 3 | | | 4 | |
| | | | 5 | | | |
| | 6 | | | | | |
| | | | 7 | | | |
| 8 | | | | | | 9 |
| | 10 | 11 | | | 12 | |

**வலமிருந்து இடம்**

01. கர்த்தர் எதை விளக்குக்கொளுத்தி சோதிப்பார்?
04. கர்த்தருடைய வார்த்தை எந்த ராஜா அரசாண்ட காலத்தில் ஆகாய் தீர்க்கதரிசிக்கு உண்டானது?
07. எத்தனை மனிதர் ஒரு யூதருடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக் கொள்வார்கள்?
10. எது என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன் என்கிறார்?

**இடமிருந்து வலம்**

01. கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே எந்த தீர்க்கதரிசியை அனுப்புவார்?
08. கர்த்தர் பேரில் ஆணையிட்டு எதின்பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும் சங்காரம் பண்ணுவார்?
11. எவைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்?
12. கர்த்தருடைய எத்தனைக் கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்கு நூலைப் பார்க்கிறது?

**மேலிருந்து கீழ்**

01. கர்த்தருடைய எந்த அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்?
02. கர்த்தர் ஒரு எதை ஆயத்தம்பண்ணி அதற்கு விருந்தாளிகளையும் அழைக்கிறார்?
03. யார் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன்பாக நின்றான்?
05. கர்த்தர் யாருடைய கூடாரங்களை முதல் முதல் இரட்சிப்பார் ?

**கீழிருந்து மேல்**

06. கர்த்தர் எங்கே மோசேயிடம் நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் கற்பித்தார்?
08. சகரியா தூதனிடம் இவர்கள் எதைக் கொண்டு போகிறார்கள் என்று கேட்டான்?
09. எது தூளைப் போல் வெள்ளியையும், சேற்றைப்போல் பசும் பொன்னையும் சேர்த்து வைத்தது?
12. யார், நாம் எளிமைப்பட்டோம், ஆனாலும் பாழானவைகளைத் திரும்ப கட்டுவோம் என்கிறார்கள் ?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

பரிசு பெறும் 5 நபர்கள்:

1) Sis.K. லிபினா, தூத்துக்குடி
2) Sis.R.ரெபேக்காள், கோரம்பள்ளம்
3) Sis.J.லதா ஜெபராஜ், புதுக்கோட்டை
4) Sis. V.செல்லம்மாள், புதுக்கோட்டை
5) Bro. Y.மரிய ஏசுவடியான், சூசை பாண்டியாபுரம்

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name : J. Samuel Jebaraj**
**Bank : ICICI - Bank**
**A/c No. : 613901506045**
**IFC Code : ICIC 0006139**
**Branch : Tuticorin**

*UPI ID:*
**prjsjebaraj@okaxis**

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

01.04.2025- செவ்வாய்க்கிழமை
**முழுஇரவு ஜெபம்- திருநெல்வேலி**

08.04.2025- செவ்வாய்க்கிழமை
**ஊழியர்கள் கூடுகை -தாழையூத்து**

10.04.2025- வியாழக்கிழமை
**7 மணி நேர உபவாச ஜெபம் - திருவைகுண்டம்**

14.04.2025- திங்கட்கிழமை
**ஆண்கள் முகாம்- சென்னை**

15.04.2025-செவ்வாய்க்கிழமை
**எழுப்புதல் கூட்டம் - நாகர்கோவில்**

15.04.2025- செவ்வாய்க்கிழமை
**முழுஇரவு ஜெபம்- தூத்துக்குடி**

25.04.2025- வெள்ளிக்கிழமை
**முழுஇரவு ஜெபம்- கயத்தார்**

28.04.2025- திங்கட்கிழமை
**அமாவாசை ஜெபம்- பிரேயர் பார்க்**

# ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: **337 022 2215**, PASSCODE: **1234**

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ..........................................................................

..........................................................................

..........................................................................